சட்டப்பேரவையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பதிலுரை... 12ஆம் பக்கத் தொடர்ச்சி

அமைப்புகள் மற்றும் நவீன கூட்டுறவு சேவைகளை தெரிந்து கொள்ளும் வகையிலும் படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறும் பொருட்டு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கும் வகையிலும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால், கூட்டுறவு தொழில்நுட்ப மையம் அமைக்கப்படும்.

இம்மையத்தில் இ-சேவை, வங்கி சேவை உள்ளிட்ட அனைத்து கூட்டுறவு சேவைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

25. மாவட்ட கூட்டுறவு மேலாண்மை நிலையங்களில் திறன் மேம்பாட்டு மையங்கள் உருவாக்கப்படும்.

இளைஞர்களின் திறனை வளர்ப்பதற்காகவும், படிப்பை முடித்த பிறகு சிறந்த வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்காகவும், பல்வேறு திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்த ஏதுவாக மாவட்ட கூட்டுறவு மேலாண்மை நிலையங்களில் திறன் மேம்பாட்டு மையங்கள் உருவாக்கப்படும். இம்மையங்களில் மென்திறன், நவீன தொழில் நுட்பத்திறன் போன்ற வேலைவாய்ப்பு சார்ந்த திறன் பயிற்சிகள் வழங்கப்படும்.

26. கூட்டுறவுகள்மூலம் வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் மேலாண்மை சேவைகள் வழங்கப்படும்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பல்சேவை மையங்களாக செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் நிறுவப்பட்டுள்ள அனைத்து வகையான வேளாண் இயந்திரங்களை பராமரித்தல் மற்றும் மேலாண்மை செய்வதற்காக 'வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் மேலாண்மை அமைப்பு ஏற்படுத்தப்பட்டு அனைத்து வேளாண் இயந்திரங்களின் பராமரிப்பு மற்றும் பயன்பாடு உறுதி செய்யப்படும். இதன்மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் வருவாய் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும்.

27. கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் உழவர் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்படும்.

விவசாயிகளுக்கு விவசாயம் மற்றும் அது சார்ந்த தொழில்நுட்பங்களை வழங்குவதற்காகவும், வேளாண் சாகுபடி குறித்த தகவல்கள் அளிப்பதற்காகவும், விளைபொருள்களை மதிப்பு கூட்டி சந்தை வாய்ப்புக்களை அமைத்து தருவதற்காகவும், விவசாயத்தை லாபகரமாக மாற்றி அதிக வருவாய் பெறும் நோக்கிலும் உழவர் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்படும்.

இச்சங்கங்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்து உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படும்.

28. உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக சுய உதவிக்குழு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும்.

சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பல்வேறு உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில்களில் தன்னம்பிக்கையுடன் ஈடுபடவும், கடன் வழங்கவும், உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும், ஊக்குவித்து பயிற்சியளிப்பதற்கும், அவர்களின் பொருளாதாரம் மேம்படவும் சுய உதவிக்குழு கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்படும்.

இச்சங்கங்கள் இதர வகை கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்து செயல்பட்டு உறுப்பினர்களுக்கான பொருளீட்டும் திறனை மேம்படுத்தும்.

29. கூட்டுறவு வங்கிகள்மூலம் மின்னணு வங்கியியல் கூடங்கள் (Banking Kiosk) அமைக்கப்படும்.

கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கு நவீன வங்கி சேவைகள் எளிதாக கிடைக்கும் வண்ணம் பெருநகரங்களில் பன்னோக்கு முனையங்கள் (Multipurpose Kiosks) மற்றும் கணக்கு புத்தகம் அச்சிடும் இயந்திரங்கள் (Pass book printers) பணம் மறுசுழற்சி இயந்திரங்கள் (Cash Recycler Machines) ஆகிய நவீன வங்கியியல் கருவிகளுடன் கூடிய மின்னணு வங்கியியல் கூடங்கள், மொத்தம் ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் ஏற்படுத்தப்படும்.

30. மதுரை மாவட்டம், திருமங்கலம் மற்றும் பேரையூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் பருப்பு மற்றும் சிறுதானியங்கள் பதனிடும் அலகுகள் அமைக்கப்படும்.

வேளாண் விளைபொருட்களின் மதிப்பைக் கூட்டி, விவசாயிகளுக்கு ஆதாய விலையை உறுதி செய்திட, மதுரை மாவட்டம், திருமங்கலம் மற்றும் பேரையூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் பருப்பு மற்றும் கேழ்வரகு பதனிடும் மற்றும் பேக்கிங் அலகுகள் அமைக்கப்படும்.

இச்சங்கங்களில் பதனிடப்பட்ட தரமான பருப்பு மற்றும் கேழ்வரகு, கூட்டுறவு அங்காடிகள்மூலம் நுகர்வோருக்கு நியாயமான விலையில் விற்பனை செய்யப்படும்.

31. பொதுமக்களுக்கு மலிவு விலையில் மருந்துகள் விற்பனை செய்யும் சேவை விரிவுபடுத்தப்படும்.

பொதுமக்களுக்கு மலிவு விலையில் மருந்துகள் கிடைப்பதை உறுதிசெய்ய அனைத்து நகரங்களிலும் கூட்டுறவு மருந்தக சேவை விரிவுபடுத்தப்படும். மருத்துவமனை மற்றும் கூட்டுறவு மருந்தகங்களுக்கான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் (Surgicals) மைய மருந்து கொள்முதல்மூலம் குறைந்த விலையில் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு குறைந்த விலையில் கூட்டுறவு மருந்தகங்கள்மூலம் விற்பனை செய்யப்படும். இப்பணியை தொடர்ந்து கண்காணித்து செயல்படுத்த மருந்தக கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு இப்பணி சிறப்பாக செயல்படுத்தப்படும்.

32. கூட்டுறவு பதனிடும் சங்கங்களில் பெறப்படும் உப பொருட்களை பயன்படுத்தி கால்நடை மற்றும் கோழி தீவன உற்பத்தி அலகுகள் அமைக்கப்படும் .

கூட்டுறவு வேளாண்மை உற்பத்தி சங்கங்களில் பருப்பு, எண்ணெய் பதனிடப்பட்டு கிடைக்கும் உப பொருட்களை கால்நடை மற்றும் கோழி தீவனமாக மதிப்புக் கூட்டுவதற்காக சிதம்பரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின்மூலம் கால்நடை மற்றும் கோழி தீவன உற்பத்தி அலகு அமைக்கப்படும்.

இதன்மூலம் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் கால்நடை மற்றும் கோழி தீவனம் கிடைக்க வழிவகுக்கும். மேலும் சங்கத்தின் வருவாய் அதிகரிக்கும்.

33. நலிவடைந்துள்ள உப்பு உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் புத்துயிரூட்டப்படும்.

ஆறுமுகநேரி உப்புத் தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம், மரக்காணம் ஆதிதிராவிடர் உப்புத் தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் ஆகியவற்றை புத்துயிரூட்டி, அவற்றைச் செயல்படக்கூடிய அலகுகளாக மாற்றப்படும். மேலும், வேதாரண்யம் உப்பு தொழிலாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கத்தின் உற்பத்தி திறனை அதிகரித்து நவீன சிப்பமிடும் வசதி ஏற்படுத்தப்படும்.

இவற்றின் உற்பத்தி திறனை அதிகரித்து அனைத்து மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு அங்காடிகள்மூலம் விற்பனை செய்யப்படும்.

இதன்மூலம் நலிவடைந்த தொழிலாளர்கள் மற்றும் உப்பு உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும்.

34. காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு சொந்தமான இடத்தில் "காஞ்சி கூட்டுறவு வளாகம்" கட்டப்படும்.

கூட்டுறவுகளின் சேவைகள் அனைத்தும் ஓரிடத்தில் பொதுமக்களுக்கு கிடைக்கும் வகையில், காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அப்பண்டகசாலைக்கு சொந்தமான இடத்தில் சுயசேவைப் பிரிவுடனான அலுவலகக் கட்டடம் மற்றும் வணிக வளாகத்துடன் கூடிய பல்நோக்கு கூட்டுறவு வளாகம் அமைக்கப்படும்.

இதன்மூலம் பண்டகசாலையின் வணிக செயல்பாடு அதிகரிப்பதுடன் கூடுதல் வருவாய் கிடைக்கும்.

35. வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்மூலம் சிறுதானியங்கள் கொள்முதல் செய்யவும் சந்தைப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் சிறுதானியங்கள் ஆதாய விலைக்கு சந்தைப்படுத்தவும், அவற்றை மதிப்புக் கூட்டி, மாநிலம் முழுவதும் உள்ள நுகர்வோர்களை சென்றடையும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களின் சில்லறை விற்பனை நிலையங்கள்மூலம் விற்பனை செய்யப்படும்.

இதன்மூலம் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதால் அவர்கள் சிறுதானிய உற்பத்தியில் ஈடுபட வாய்ப்பாக இருக்கும்.

36. மாநில அளவில் சிறப்பாக செயல்படும் கூட்டுறவுச் சங்கம், பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு விருதுகள் வழங்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் 7,655 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் ஏறத்தாழ 48,000 பணியாளர்களும் மற்றும் ஒரு கோடி உறுப்பினர்களும் உள்ளனர்.

கூட்டுறவுச் சங்கங்கள், பணியாளர்கள், உறுப்பினர்களை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த சங்கங்கள், சங்கப் பணியாளர்கள் மற்றும் சிறந்த உறுப்பினர்கள் ஆகிய பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படும்.

37. கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் வாரிசுகளில் அரசுப் பள்ளிகளில் பயின்று 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறந்த மதிப்பெண் பெறுபவர்களுக்கு விருதுகள் வழங்கப்படும்.

கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் வாரிசுகளில் அரசுப் பள்ளிகளில் பயின்று 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெறுபவர்களை ஊக்குவிக்கவும், பாராட்டவும் விருதுகள் வழங்கப்படும்.

இதன்மூலம் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு சங்கத்தின் மீதுள்ள ஈடுபாடு அதிகரிப்பதுடன் அவர்களின் வாரிசுகள் கல்வியில் சிறந்து விளங்கவும் வாய்ப்பு ஏற்படும்.

38. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்மூலம் இராமநாதபுரத்தில் வேளாண் இடுபொருட்கள் சேமிக்க 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு கட்டப்படும்.

இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் விவசாய இடுபொருட்கள் வழங்கப்படுவதை உறுதி செய்யவும், விவசாயப் பருவத்தை முன்னிட்டு இடுபொருட்களை இருப்பு வைத்திருக்கவும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பட்டினம்காத்தானில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்மூலம் 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு கட்டப்படும்.

இதன்மூலம் விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் பாதுகாப்பாக இருப்பு வைக்கப்பட்டு தட்டுப்பாடின்றி உரிய நேரத்தில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

39. வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகள் வழங்கும் நோக்கில் கூட்டுறவு வங்கிகள் நவீனமயமாக்கப்படும்.

அடித்தட்டு மக்களின் வாழ்க்கையில் பல தலைமுறைகளாக இரண்டறக்கலந்த கூட்டுறவு வங்கிகள், அவர்களின் நன்மதிப்பினை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளவும், அடுத்த தலைமுறையினரையும் ஈர்க்கும் வண்ணம் வங்கிகளின் தோற்றப் பொலிவினை மேம்படுத்திடவும், நவீன வங்கியியல் அனுபவத்தை கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர்களுக்கு வழங்கிடவும், 50 கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதன் கிளைகள் நவீனமயமாக்கப்படும்.

40. விவசாய பெருமக்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகள் வழங்குவதற்காக தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் நவீனமயமாக்கல் பணி மேற்கொள்ளப்படும்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அதன் அதிகார எல்லைக்குட்பட்ட அனைத்து மக்களின் பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்த தற்போது பல்நோக்கு சேவை சங்கங்களாக உருவாகி வருகின்றன.

பல்நோக்கு சேவைகள் வழங்குவதற்கு ஏதுவாகவும் சேவைகள் அனைத்து தரப்பினரையும் விரைவில் சேரும் வண்ணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு உட்கட்டமைப்பு நவீனமயமாக்கப்படும். மேலும், தேவைக்கேற்ப புதிய அலுவலக கட்டடங்கள் கட்டப்படும்.

41. பொது விநியோகத் திட்ட நுகர்வோருக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகள் வழங்குவதற்காக கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் நியாய விலைக் கடைகள் பொலிவூட்டப்படும் .

அனைத்து மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திடும் பொது விநியோகத் திட்டத்தினை, கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் நியாயவிலைக் கடைகள் சிறப்பாக செயல்படுத்தி வருகின்றன. பொது விநியோகத் திட்ட நுகர்வோருக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகள் வழங்குதவற்காக கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் நியாய விலை கடைகள் பொலிவூட்டப்படும். இதன்மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறந்த நுகர்வு அனுபவம் கிடைக்கவும் விரைவில் பொருட்களை பெற்றுச்செல்லவும் வழிவகுக்கும் .

42. கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள வாராக்கடன்களை வசூலிக்கவும் விசாரணையை கண்காணிக்கவும் "இ-தீர்வு" திட்டம் தொடங்கப்படும்.

கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் 7,655 சங்கங்களில் பல்வேறு சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்வதில் கால விரயம் ஏற்படுவதுடன், கோப்புகள் பராமரிப்பதில் பல்வேறு இடர்பாடுகள் ஏற்படுகின்றது. இப்பணியை எளிதாக்கிட கூட்டுறவுத் துறை மூலம் மேற்கொள்ளப்படும் சட்டப்பூர்வ தாவா நடவடிக்கைகளை விரைவாகவும், வெளிப்படைத்தன்மையுடன் சீரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கென "இதீர்வு" என்ற இணைய வசதி ஏற்படுத்தப்படும். இதன் வாயிலாக தாவா, விசாரணை உள்ளிட்ட செயல்பாடுகள் இணைய வழி மேற்கொள்ளப்பட்டு சங்கங்களின் வாராக்கடன் குறைக்கும் நடவடிக்கைகளில் முன்னேற்றம் காண வழிவகை செய்யப்படும்.

43. அனைவருக்குமான கூட்டுறவு என்பதை உறுதி செய்ய தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளிலும் கூட்டுறவுச் சங்கங்களின் அனைத்து சேவைகளும் ஒருங்கே கிடைக்க கூட்டுறவுச் சங்கங்களின் 100 கிளைகள் தொடங்கப்படும்.

கூட்டுறவின் சேவைகள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பகுதி மக்களை சென்றடையும் வகையில் 100 இடங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் உருவாக்கப்படும். இதன்மூலம் அனைத்து பகுதியில் உள்ள பொதுமக்கள் தங்கள் பகுதியிலேயே கூட்டுறவுச் சேவைகள் பெற வழிவகை செய்யப்படும். தமிழ்நாட்டின் அனைத்து வட்டார பகுதிகளிலும் இது சீரான பொருளாதார வளர்ச்சிக்கு உறு துணையாக அமையும்.

திருநங்கைகளுக்கு குடும்ப அட்டை வழங்கியது குறித்து முதலமைச்சர் அவர்களை பாராட்டியதோடு மட்டுமல்லாமல், கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். நடத்தப்படும் என்ற உறுதியை அவரும் தந்திருக்கிறார். நாமும் நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம். கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுற்றுச் சுவர்களைக் கட்டி பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்ற ஆலோசனையை சொன்னார். அது நல்ல ஆலோசனைதான். அது நிறைவேற்றப்படும்.

மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமது, கவுண்டம்பட்டி கூட்டுறவுச் சங்கத்தில் 1,524 விவசாயிகளுக்கான சலுகைகள் வரவில்லை என்று சொன்னார். அந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை, முதல் தவறு, சிட்டா அடங்கல் இல்லாமல் கடன் வழங்கிய விதிமீறல் நடைபெற்றிருக்கிறது. நீங்கள் ஏற்கெனவே சொன்னதன் அடிப்படையில் அதுகுறித்த விவரங்களைக் கேட்டிருந்தேன். அதற்குப் பிறகு கிடைத்த பதில் இது. ஆனாலும், அதை சரி செய்வதற்கான வாய்ப்பு இன்னும் இருக்கிறது. Audit முடிந்தவுடன் அதை செய்து தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்த தவறு, சங்கத்தில் நிதியில்லாமல், மத்திய வங்கியிடம் நிதியும் பெறாமல் ஏட்டளவில் கடன் வழங்கியிருக்கிறார்கள். அது நிர்வாகக் குளறுபடி. தீர்மானத்தில் இடைச்செருகல் முறையிலும் எழுதி கடன் வழங்குவது போன்ற விதிமீறல்கள் இருந்ததால் கடன் தள்ளுபடி ஆகவில்லை. இவற்றை சிறப்புத் தணிக்கைக்கு உட்படுத்தி, விரைவில் தள்ளுபடி செய்ய முதலமைச்சர் அவர்களிடம் அதுபற்றி சொல்லி பெற்றுத் தருவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அசோகன் எழுப்பிய ஐயப்பாடுகளுக்கெல்லாம் நமது உணவுத் துறை அமைச்சர் அவர்களே பதில் சொல்லிவிட்டார்கள். கட்டடங்கள் வாடகையில் இருப்பதாகச் சொன்னார்கள். சில இடங்களில், அரசினுடைய இன்னொரு துறையான நகராட்சி நிர்வாகத் துறையின்மூலம் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு வாடகை பிரச்சினை குறித்து சொன்னார்கள். அதற்குத் தீர்வு காணும் பொறுப்பை உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதனால் அந்தப் பிரச்சினையும் முடிந்து விடும்.

நான் ஏற்கெனவே, என்னுடைய பதிலுரையில் சொல்லியிருக்கிறேன். இன்னும் எவ்வளவுக் கட்டடங்கள் வாடகையில் இயங்குகிறது. தற்போது எவ்வளவு கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறோம். இன்னும் நம்முடைய ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் அறிவிக்கப்பட்டதற்கு உணவுத் துறை அமைச்சர் அவர்களே பொறுப்பேற்றிருக்கிறார். 500 கடை கட்டித் தரப் போகிறார்கள். இன்னும் ஒருசில ஆண்டுகளில் அனைத்துக் கடைகளும் இன்றைக்கு இருக்கிற சுமார் 35,000 கடைகளும் சொந்தக் கட்டடங்களில் இயங்கக்கூடிய அளவிற்கு வரும். அதற்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பு தர வேண்டும். ஆண்டுக்கு ஒரு இரண்டு, மூன்று கடைகளை உங்களுடைய தொகுப்பு நிதியிலிருந்துக் கட்டிக் கொடுத்தால் இன்னும் அந்தப் பணிகள் சிறப்பாக நடக்கும். செய்கிறீர்கள். செய்பவர்களுக்கு நன்றி. செய்ய வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பதிலுரையாற்றினார்.

- கூட்டுறவு சில்லறை விற்பனை நிலையங்கள் அனைத்து மாநகராட்சிகளிலும், பெருநகரங்களிலும் தொடங்கப்படும்.
- சிறுதானியங்கள் ஆதாய விலைக்கு சந்தைப்படுத்தவும், அவற்றை மதிப்புக்கூட்டி, மாநிலம் முழுவதும் உள்ள நுகர்வோர்களைச் சென்றடையும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களின் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படும்.
- கூட்டுறவு தொழில்நுட்ப மேம்பாட்டு திட்டம். தற்போதைய தொழில்நுட்ப சூழலுக்கு ஏற்றவாறு சிறந்த சேவைகளை வழங்குவதற்கான புதிய தொழில் நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் கூட்டுறவு சங்கங்கள் தங்கள் செயல் திறனை மேம்படுத்தி சந்தையில் நிலவும் போட்டிகளை எதிர்கொண்டு வளர்ச்சி பாதையில் செல்ல வழிவகுக்கும்.
- கூட்டுறவு உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம். நலிவடைந்த சங்கங்களின் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லாத நிலையில் அச்சங்கங்களுக்கு புத்துயிரூட்டும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு உறுப்பினர்களுக்கான சேவை உறுதிப்படுத்தப்படும்.
- மின்னணு பணப்பரிவர்த்தனை சேவை விரிவாக்கப்படும்.
- கூட்டுறவு கடன் சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், கூட்டுறவு சிறப்பு சங்கங்களின் அனைத்து விதமான பணியாளர்களுக்கும் பணி சார்ந்த புத்தாக்கப் பயிற்சிகள் மற்றும் ஆளுமைத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தல் பணியில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவுப்படி மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாவட்டத் துணைச் செயலாளர் நாகராஜன் மற்றும் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் சோழாம்பூண்டி, சோழனூர் ஆகிய ஊராட்சிகளில் வீடு வீடாகச் சென்று தீவிர பிரச்சாரம் செய்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சேப்பாக்கம் கே.எஸ்.பாண்டியன்
ஜூன் 30 (2015)

கழகம் துவங்கிய காலத்திலேயே அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் வட்டச் செயலாளராக, ஆயிரம்விளக்கு பகுதி துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகப் பேச்சாளரான இவர், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.